இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

அக்டோபர் 9 ஆம் தேதி விருப்ப நினைவு நாளாகக் கொண்டு, திருஅவையின் மறைவல்லுநர் புனித ஜான் ஹென்றி நியூமனை பொது உரோமை நாள்காட்டியில் சேர்த்துள்ளார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

# நைஜீரியா படுகொலைகள் நாட்டின் எதிர்காலத்தை அச்சுறுத்துகின்றன!


நைஜீரிய ஆயர்கள்

அரசு நிறுவனங்களை வலுப்படுத்தவும், பாதுகாப்பையும் நீதியையும் உறுதி செய்யவும், தேசிய ஒற்றுமையை மேம்படுத்தவும் தேசிய, மத மற்றும் சமூகத் தலைவர்கள் ஒன்றிணைந்து செயல்படவும் ஆயர் மேத்யூ ஹசன் குகா அழைப்பு விடுத்தார்.

நைஜீரியாவில் நாள்தோறும் தொடர்ந்து அதிகரித்து வரும் படுகொலைகள் நாட்டை தார்மீக மற்றும் நிறுவன சரிவை நோக்கித் தள்ளுவதாக, சொகோட்டோவின் கத்தோலிக்க ஆயர் மேத்யூ ஹசன் குகா அவர்கள் எச்சரித்துள்ளார்.

அடமாவா மாநிலத்தின் யோலாவில் பேசிய ஆயர் குகா அவர்கள், "வேறு எந்த நாடும் இதுபோன்ற வழக்கமான அளவிலான வன்முறையை அனுபவிப்பதில்லை" என்றும், "இப்படிப்பட்ட சூழல்களின் கீழ் நைஜீரியா எவ்வாறு தொடர் வளர்ச்சியை எட்ட முடியும்" என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

வன்முறையை முதன்மையாக மத அடிப்படையில் வடிவமைக்கும் முயற்சிகளை விமர்சித்துள்ள ஆயர் குகா அவர்கள், இதுபோன்ற விவரிப்புகள் பிளவுகளை ஆழப்படுத்துவதாகவும் சமூகங்களுக்கு இடையே அவநம்பிக்கையைத் தூண்டுவதாகவும் எடுத்துக்காட்டியுள்ளார்.

மேலும் பாதிக்கப்பட்டவர்களின் மத அடையாளங்களை வலியுறுத்துவதன் மூலம் மேற்கத்திய ஊடகங்கள் குறுங்குழுவாத விளக்கங்களை வலுப்படுத்துவதாகவும் குற்றம் சாட்டியுள்ளார் ஆயர் குகா.

அரசியல் மற்றும் நிறுவன ரீதியான பதிலுக்கு அழைப்பு விடுத்துள்ள ஆயர் குகா அவர்கள், "அரசு நிறுவனங்களை வலுப்படுத்தவும், பாதுகாப்பையும் நீதியையும் உறுதி செய்யவும், தேசிய ஒற்றுமையை மேம்படுத்தவும் தேசிய, மத மற்றும் சமூகத் தலைவர்கள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்" என்று வலியுறுத்தியுள்ளார்.

இறுதியாக, கூட்டுப் பொறுப்பும், மதவெறியை நிராகரிக்கும் தன்மையும் இல்லாவிட்டால், நைஜீரியா அதன் தார்மீக திசையை இழக்கும் ஆபத்து இருப்பதாக எச்சரித்துள்ளார்.

செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்

# உரோமை பொது நாள்காட்டியில் புனித ஜான் ஹென்றி நியூமன்!


புனித ஜான் ஹென்றி நியூமன் (ANSA)

இந்த ஆணை நியூமன் வாழ்நாள் முழுவதும் ஏழைகளுக்கு அளித்த சேவை, அவரது மறையுரை, கற்பித்தல், இறையியல் மற்றும் திருஅவையின் மீதான அவரது நீடித்த செல்வாக்கை வலியுறுத்துவதுடன், அவரை வரலாறு முழுவதும் திருஅவைக்கு வழிகாட்டும் ஒளியாகவும், கிறிஸ்தவ வாழ்க்கைக்கு ஒரு முன்மாதிரியாகவும் முன்வைக்கிறது.

அக்டோபர் 9 ஆம் தேதி விருப்ப நினைவு நாளாகக் கொண்டு, திருஅவையின் மறைவல்லுநர் புனித ஜான் ஹென்றி நியூமனை பொது உரோமை நாள்காட்டியில் சேர்த்துள்ளார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

திருத்தந்தையின் இந்த முடிவை இறைவழிபாடு மற்றும் அருளடையாளங்களின் ஒழுங்குமுறைக்கான திருப்பீடத்துறை பிப்ரவரி 03, செவ்வாய்க்கிழமை அன்று வெளியிட்ட ஆணையில் அறிவித்துள்ளது.

1845-ஆம் ஆண்டு நியூமன் கத்தோலிக்க அவைக்கு மாறியதன் ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், அக்டோபர் 9-ஆம் தேதி இந்த விருப்ப நினைவுதினம் அனுசரிக்கப்படும்.

கடந்த 2025-ஆம் ஆண்டு நவம்பர் முதல் தேதி அன்று, திருத்தந்தை லியோ அவர்கள், நியூமனை திருஅவையின் கல்விப் பணியின் இணை-பாதுகாவலராகவும், புனித தாமஸ் அக்வினாஸுடன் சேர்த்து திருஅவையின் மறைவல்லுநராகவும் அறிவித்ததைத் தொடர்ந்து இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

“இந்த நினைவு நாள் அனைத்து வழிபாட்டு நாள்காட்டிகளிலும், திருப்பலி மற்றும் நேர வழிபாட்டு புத்தகங்களிலும் சேர்க்கப்படும்” என்றும், “ஆயர்ப்பேரவைகள் மொழிபெயர்த்து அங்கீகரிக்கும் நூல்களைப் பயன்படுத்தி சேர்க்கப்படும்” என்றும் இவ்வாணை கூறுகிறது.

பிப்ரவரி 03, செவ்வாய்க்கிழமை அன்று வெளியிடப்பட்ட இந்த ஆணையில், கடந்த 2025-ஆம் ஆண்டு நவம்பர் 9, ஞாயிறன்று, கர்தினால் ஆர்தர் ரோச் மற்றும் பேராயர் வித்தோரியோ பிரான்செஸ்கோ வயோலா இருவரும் கையெழுத்திட்டுள்ளனர்.

செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்

# மனித வர்த்தகத்திற்கு எதிராக பிலிப்பீன்ஸ் ஆயர்கள்!


மனித வர்த்தகம் (©artit - stock.adobe.com)

வலுக்குறைந்த மக்களைப் பாதுகாப்பதில் திருஅவையின் தார்மீக மற்றும் சமூக உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில், தலத்திருஅவை-அரசு ஒத்துழைப்பு மற்றும் நாடு முழுவதும் மறைமாவட்ட மனித வர்த்தக எதிர்ப்புக் குழுக்களை உருவாக்குதல் அல்லது வலுப்படுத்துதல் ஆகியவற்றிற்கு ஆயர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

மனித வர்த்தகத்திற்கு எதிராக வலுவான மற்றும் ஒருங்கிணைந்த நடவடிக்கை எடுக்குமாறு மறைமாவட்டங்களை வலியுறுத்தியுள்ள பிலிப்பீன்ஸ் ஆயர் பேரவை, "இது நாட்டில் ஒரு தீவிரமான மற்றும் தொடர்ச்சியான பிரச்சனை" என்று சுட்டிக்காட்டிள்ளது.

"சட்டவிரோத ஆள்சேர்ப்பு மற்றும் கட்டாய உழைப்பு முதல் பாலியல் சுரண்டல் மற்றும் குழந்தைகளை இணைய வழியில் முறைகேடுகளில் ஈடுபடுத்துவது வரை மனித வர்த்தகம் பரவலாக உள்ளது" என்றும், "குறிப்பாக, மெட்ரோ மணிலா போன்ற நகர்ப்புறங்களில் இது பரவலாக உள்ளது" என்றும் ஆயர்கள் எச்சரித்துள்ளனர்.

"வயது வந்த பெண்களும், வயது வராத சிறுமிகளுமே பொதுவாக அதிகமாகப் பாதிக்கப்படுபவர்கள்" என்றும், "ஏமாற்றும் இணையவழி ஆள்சேர்ப்பு மூலம் எண்மமுறை (டிஜிட்டல்) தளங்கள் கடத்தலை எளிதாக்கியுள்ளன" என்றும் குறிப்பிட்டுள்ள ஆயர்கள், வறுமை, கல்வியின்மை, மோதல்கள் மற்றும் இயற்கைப் பேரழிவுகள் ஆகியவை பாதிப்பை அதிகரிக்கும் முக்கிய காரணிகளாக எடுத்துக்காட்டியுள்ளனர்.

மனித வர்த்தகத்தை முன்னாள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கண்டித்ததற்கு இணங்க, வலுக்குறைந்த மக்களைப் பாதுகாப்பதில் திருஅவையின் தார்மீக மற்றும் சமூக உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில், தலத்திருஅவை-அரசு ஒத்துழைப்பு மற்றும் நாடு முழுவதும் மறைமாவட்ட மனித வர்த்தக எதிர்ப்புக் குழுக்களை உருவாக்குதல் அல்லது வலுப்படுத்துதல் ஆகியவற்றிற்கு ஆயர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்

# ஒரே குரலாக கிறிஸ்துவில் இணைந்தோம்

## பாடகர் குழு விழா 2026

திருவழிபாட்டில் இசை என்பது வெறும் அலங்காரம் அல்ல; அது கிறிஸ்துவின் உடலாகிய நமது அடையாளத்தைப் புதுப்பிக்கும் ஒரு வழியாகும். இந்த உண்மையை ஆழமாக உணர்த்தும் வகையில், "புனித இசை – யுகங்கள் வழியாக திருச்சபையின் பயணம்" என்ற கருப்பொருளில், கோலாலம்பூர் மறைமாவட்ட வழிபாட்டு ஆணையம் (ALC) மற்றும் சீன, பஹாசா அப்போஸ்தலர் குழுக்கள் இணைந்து ஒரு சிறப்பான நிகழ்வை ஒருங்கிணைத்தன.

கடந்த ஜனவரி 24, 25 ஆகிய திகதிகளில் செராஸ், புனித பிரான்சிஸ் அசிசி ஆலயத்தில் நடைப்பெற்ற இவ்விழாவில், 12 பங்குகளைச் சேர்ந்த 90-க்கும் மேற்பட்ட தமிழ் பாடகர்குழுவினர் கலந்துகொண்டனர்.

முதல் நாள் நிகழ்வில் அருட்தந்தை லியோனார்ட் லெக்சன் அவர்கள், திருவழிபாட்டு இசையும். வரலாறும் அதன் ஆன்மீக அர்த்தமும் குறித்து விளக்கினார். இசை என்பது பொழுதுபோக்கு அல்ல; மாறாக, விசுவாசிகளைப் பாஸ்கா மறைபொருள் இரகசியத்தில் பங்கேற்கச் செய்யும் ஒரு ஆன்மீக முயற்சி என அவர் குறிப்பிட்டார். கிரகோரியன் பாடல்கள் முதல் இன்றைய நவீன காலப் பாடல்கள் வரை, இசை எவ்வாறு இறைவார்த்தைக்கு மெருகூட்டுகிறது என்பதை அவர் வரலாற்றுப் பாதையில் விளக்கினார். "பக்தி ஜெபங்களை நாம் வடிவமைக்கிறோம்; ஆனால் திருப்பலி ஜெபங்கள் நம்மை வடிவமைக்கின்றன" என்ற அவரது வார்த்தைகள், இசையின் முக்கியத்துவத்தை ஆழமாகப் பதிய வைத்தன.

தொடர்ந்து நடைபெற்ற பயிற்சிப் பட்டறையில், அருட்தந்தை ஞானச்செல்வம் பெரன்டிஸ் மற்றும் சகோதரர்கள் மைக்கேல், வாசு, ஸ்டீபன் ஆகியோர் குரல் நுட்பங்கள் குறித்துப் பகிர்ந்தனர். பாடகர் குழுவினர் தங்களை மேடைக்கலைஞர்களாக அல்லாமல், இறைவார்த்தையை அறிவிக்கும் "செபத்தின் பணியாளர்கள்" என உணர வேண்டும் என்ற வலியுறுத்தப்பட்டது. சரியான உடல்நிலை (Posture), வயிற்றுப் பகுதியிலிருந்து சுவாசிக்கும்பயிற்சி (Diaphragm Breathing) போன்ற நுட்பங்களும் கற்றுத்தரப்பட்டன.

இரண்டாம் நாள் அமர்வை அருட்தந்தை ஞானச்செல்வம் பெரன்டிஸ் அவர்கள் வழிநடத்தினார். திருப்பலியில் பாடகர் குழுவின் முன்னுரிமைகள் குறித்து விளக்கிய அவர், 'பரிசுத்தர்', நற்செய்தி வாழ்த்தொலி மற்றும் சங்கீதங்கள் போன்ற மக்கள் அனைவரும் இணைந்து பாடும்பகுதிகளுக்கே முதலிடம் அளிக்க வேண்டும் என்றார். மேலும், பாடகர் குழுவினர் ஆடம்பரத்தைத் தவிர்த்து, எளிமையான உடையும் தாழ்மையான மனநிலையும் கொண்டு, மக்களின் கவனத்தை நற்கருணையை நோக்கி வழிநடத்த வேண்டும் என அறிவுறுத்தினார். "Priestly People", "A Call to Christian Unity" மற்றும் "Holy God We Praise Thy Name" ஆகிய மூன்று பாடல்கள் பன்மொழிகளில் ஒலித்தன.

பாடகர் குழுவினர் வெறும் பாடல்களைப் பாடுபவர்கள் மட்டுமல்ல; அவர்கள்வழிபாட்டின் வழியாக இறைவனையும் மக்களையும் இணைக்கும் பாலமாக இருப்பதை உறுதிப்படுத்துபவர்கள். "ஒரே குரலாக, ஒரே இதயமாக" பாடும்போது, நாம் விண்ணகத்திருப்பலியின் சுவையை மண்ணிலேயே அனுபவிக்கிறோம். பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களின் இறுதி ஆசீர்வாதத்துடன் இந்த ஆவிக்குரிய சங்கமம் இனிதே நிறைவுற்றது. நமது குரல்களும் வாழ்க்கையும் கடவுளின் மகிமைக்காகவும், திருச்சபையின் வளர்ச்சிக்காகவும் தொடர்ந்து ஒலிக்கட்டும்.

Joseph, Assumption PJ






# மலாக்கா ஜொகூர் மறைமாவட்டத்தின் மேய்ப்புப்பணிப் பாதையை அமைக்கும் 'மனமாற்ற ஒன்றியங்கும்'





2025-ஆம் ஆண்டு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், உருவாக்கம் மற்றும் ஆலோசனைகளைத் தொடர்ந்து, மலாக்கா ஜொகூர் மறைமாவட்டம் (MJD), 'மனமாற்றத்தோடு சேர்ந்து பயணிக்கும் (ஒன்றியங்கும்)' (Synodal Conversion) வேரூன்றிய புதுப்பிக்கப்பட்ட மேய்ப்புப்பணிப் பார்வையுடன் 2026-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது.

'ஒன்றியங்கும் தன்மை' (Synodality) முதிர்ச்சியடையக் கால அவகாசம் தேவை என்பதை உணர்ந்து, மறைமாவட்ட உறவுகள் மற்றும் செயல்முறைகளை (transforming relationships and processes) மாற்றுவதில் கவனம் செலுத்தியது. குருக்கள், துறவிகள் மற்றும் பொதுநிலையினரிடையே பரஸ்பர மரியாதையை வளர்ப்பது மற்றும் மறைமாவட்ட மேய்ப்புப்பணிப் பேரவைகள் மூலம் அனைவரும் பங்கேற்கும் முடிவெடுக்கும் முறையை ஊக்குவிப்பதும் இதில் அடங்கும். 2024 சினோட் (Synod) இறுதி ஆவணத்தின்படி, ஒன்றியங்கும் தன்மை என்பது வெறுமனே "சேர்ந்துப் பயணிப்பது" மட்டுமல்ல, மாறாகத் தூய ஆவியாரின் வழிகாட்டுதலின் கீழ் செவிமடுத்தல், தேர்ந்து தெளிதல் மற்றும் பொறுப்புணர்வுடன் கூடிய ஒரு "பகிர்ந்து கொள்ளப்பட்ட பயணம்" ஆகும்.

இச்செயல்முறையை வலுப்படுத்த, மறைமாவட்டம் 'பயிற்சியாளர்களுக்கான பயிற்சி' (Training of Trainers) திட்டத்தைத் தொடங்கியது; இது பின்னர் 'ஒன்றியங்கும் பயிற்சிகள்' (Synodal Exercises - SE) எனப் பெயரிடலோடு செயல்படுத்தப்பட்டது. மேலும் மறைமாவட்ட மேய்ப்புப்பணிப் பேரவைகளை அமைப்பதன் மூலம் கட்டமைப்புகள் வலுப்படுத்தப்பட்டன. வருடாந்திர குருக்கள் தேர்ந்து தெளிதல் (ACD) நிகழ்வு மூலம் குருக்களின் உருவாக்கம் ஆழப்படுத்தப்பட்டது. இது நவம்பர் 2025-ல் மலாக்காவிலும், ஜனவரி 2026-ல் மஜோடி (MAJODI) மையத்திலும் என இரண்டு கட்டங்களாக நடைபெற்றன.

அருட்பணி டாக்டர் கிளாரன்ஸ் தாஸ் வழிநடத்திய நவம்பர் மாத அமர்வில், உள் மனமாற்றம், திருமுழுக்கு மாண்பு, பகிரப்பட்ட பொறுப்புணர்வு, மற்றும் தாழ்ச்சி, செவிமடுத்தல், ஒப்புரவு ஆகியவற்றின் தேவை குறித்துக் குருக்கள் சிந்தித்தனர். பங்குகளின் அறிக்கைகள், முதியோர்கள் நிறைந்த சமூகங்கள், இளையோர் இடப்பெயர்வு முதல் துடிப்பான நகரப் பங்குகள் வரை மறைமாவட்டத்தின் பல்வேறு மேய்ப்புப்பணி எதார்த்தங்களை வெளிப்படுத்தின. உண்மையான சூழல்களிலிருந்து உருவாகும் 'செவிமடுக்கும் திருஅவை'யின் முக்கியத்துவத்தை இது உணர்த்தியது.

ஜனவரி 2026-ல் "ஆய்வுகள்" (Explorations) என்ற தலைப்பில் நடைபெற்ற குருக்கள் தியானத்துடன் இச்செயல்முறை நிறைவுற்றது. டேரில் டான் (Daryl Tan) நடத்திய அமர்வுகள் சுய விழிப்புணர்வு மற்றும் தனிப்பட்ட வளர்ச்சியை ஊக்குவித்தன. அருட்பணி டாக்டர் லாரன்ஸ் எங், பணிவாழ்வை (Mission) மையமாகக் கொண்ட ஒரு வலுவான வழிகாட்டுதலை வழங்கினார். நற்செய்திப் பணி என்பது திருமுழுக்கிலிருந்து ஊற்றெடுக்கிறது என்றும், அது திருஅவையின் ஒரு தனித் துறை அல்ல என்றும் அவர் நினைவூட்டினார். ஒன்றிப்பு, பங்கேற்பு மற்றும் நற்செய்திப் பணி ஆகியவற்றை உள்ளடக்கிய ஒன்றியங்கும் தன்மையே முன்னோக்கிச் செல்லும் பாதை என்று முன்வைக்கப்பட்டது. இது, திருஅவை வெறும் நிர்வாகப் பராமரிப்போடு நின்றுவிடாமல், சமூகம், ஏழைகள் மற்றும் படைப்பின் பராமரிப்பு ஆகியவற்றை நோக்கிச் செல்லும் சேவையாக மாற அழைப்பு விடுத்தது.

இந்தத் தேர்ந்து தெளிதலில் இருந்து மூன்று முக்கிய செயல்திட்டங்கள் உருவாயின:

1. MJD மேய்ப்புப்பணித் தொகுப்பு 2026 (Pastoral Kit)
2. மேய்ப்புப்பணி அறிக்கை 2026
3. முதலாவது மலாக்கா ஜொகூர் வருடாந்திர மேய்ப்புப்பணி மாநாட்டை நடத்தும் முடிவு.

"MJD: இணைந்து பயணிக்கும் மறைமாவட்டம்" என்பதே 2026-ஆம் ஆண்டின் மேய்ப்புப்பணிக் கருப்பொருளாகும். இது 2026 மலேசிய மேய்ப்புப்பணி மாநாட்டை (MPC2026) நோக்கிய பரந்த பயணத்தில் மறைமாவட்டத்தை இணைக்கிறது. ஆயர் பெர்னார்ட் பால், மறைமாவட்டத்தின் பார்வையை ஒன்றிப்பு (Communion), பங்கேற்பு (Participation), நற்செய்திப் பணி (Mission) ஆகிய மூன்று இயக்கங்களாக விவரித்தார். இது ஆங்கிலத்தில் எளிமையாக Togetherness (ஒன்றாக இருத்தல்), Together (இணைந்து செயல்படுதல்), To Gather (ஒன்று சேர்த்தல்) என்று வெளிப்படுத்தப்பட்டுள்ளது. 2026-ஆம் ஆண்டு 'தொடர் ஒன்றியங்கும் மனமாற்ற ஆண்டாக' ஒதுக்கப்பட்டுள்ளது.

# பொதுக்கால 6ஆம் ஞாயிறு

முதல் வாசகம்: சீராக் 15:15-20; இரண்டாம் வாசகம்: 1 கொரிந்தியர் 2:6-10; நற்செய்தி: மத்தேயு 5: 17-37

கிறிஸ்துவின் பிரியமானவர்களே, உங்களுக்குச் சமாதானம். இன்று ஆண்டின் பொதுக்கால 6ஆம் வாரத்தில் பயணிக்கிறோம். விசுவாசத்தை இழந்து வழி தவறி வாழ்ந்த மக்களுக்குக் கட்டளைகளைக் கொடுத்து நெறிபடுத்துவதைப் பழைய ஏற்பாட்டில் படித்திருக்கிறோம். இறைவன் அருளிய கட்டளைகள் வெறும் கடமையாகவும் சுமையாகவும் கருதியதாலேயே பாவத்திலிருந்து முழுமையாக விடுதலைப் பெறமுடியாமல் பரிதவித்த மக்களை அறிந்திருக்கிறோம். கடவுள் கொடுக்கிற கட்டளைகளை முழு மனதோடும் அன்போடும் ஏற்று கடைப்பிடிப்போருக்கு விண்ணரசு அருகில் உள்ளது என நற்செய்தி வழி மத்தேயு 5:20ல் உறுதிப்படுத்துகிறார் இயேசு ஆண்டவர். தாயின் கருவிலே நம்மை தேர்ந்தெடுத்த இறைவன் அவரது கட்டளைகளைக் கடைப்பிடிக்க நம்மை நெருக்குவதில்லை. மாறாக நமக்கு தேர்தெடுக்கும் உரிமையை கொடுக்கிறார். (சீராக் 15:16). தேர்ந்தெடுப்பது, ஆராந்து அறிவது, தூய ஆவியின் தூண்டுதலை உணர்வது என்பன கடவுள் நமக்கு அளித்திருக்கும் ஞானம் என இரண்டாவது வாசகம் அறிவுறுத்துகிறது. (1 கொரி 2:7) நாம் தியானிப்பது மறைந்திருக்கும் இறை ஞானமே. இறை ஞானத்தின் வழியே கடவுளது இறைத் திட்டத்தை அறிய முடியும். இறைவன் அருளிய கட்டளைகள் விண்ணரசுக்கு நம்மை தயாரிக்கின்றன என்பதை இறை ஞானதால் அன்றி உலக அறிவால் உணரமுடியாது என்பதே உண்மை. இன்று நமது தேவைகள் சந்திக்கப்படவும், ஆசீர்வாதத்தைப் பெறவுமே தேவாலயத்திற்கு செல்லக் காரணமாக இருக்கின்றன. ஆனால், கிறிஸ்து இயேசுவோ பரிசுத்தமான வாழ்க்கை வாழ்ந்து விண்ணரசுக்கு நம்மை அழைத்துச் செல்வதே அவரது முதன்மை திட்டம் என்பதை இன்றைய நற்செய்தி விவரிக்கிறது. திருச்சட்டத்தை அழிக்க அல்ல, அதை நிறைவேற்றிடவே வந்தேன் என பழைய சட்டத்தை இன்னும் கூர்மையாக்குகிறார். இன்று நம்மில் எத்தனை பேர் காணிக்கை செலுத்த வரும்போது, யாருடனாவது சமாதானம் செய்யாமல் இருக்கிறேனா என நம்மை நாமே சோதித்தறிகிறோம்? காணிக்கை போடுவதில் சிலருக்கு பெருமையும் கூட இருக்கிறது. நம்மேல் யாருக்காவது மனத்தாங்கல் இருந்து, அதைப் பொருட்படுத்தாமல் எத்தனை முறை காணிக்கைச் செலுத்தியிருக்கிறோம்? நம்மிடையே தவறி நடக்கும் சகோதர சகோதரிகளை 'முட்டாள்கள்' எனவும் அறிவற்றவர்கள் எனவும் அவர்களுக்கு பின்னால் இன்றும் பேசுகிறோம் அல்லவா? அவர்களுக்காக ஜெபிக்கவும் மன்னித்து அரவணைக்க வேண்டிய நாம் ஆணையிடுகிறோமே? அநேக நேரத்தில் ஆம் என்றால் ஆம், இல்லை என்றால் இல்லை என்றில்லாமல் கூட்டியோ குறைத்தோ பிறரைப் பற்றி பேசி சாத்தானுடன் கூட்டு வைத்திருக்கிறோமே? இவற்றையெல்லாம் இறைவன் தரும் ஞானத்தால் வெல்ல முடியும் என இன்றைய வாசகங்கள் வழி அறிகிறோம். நம் கையில் தவிழும் இறைவார்த்தையை தினம் தினம் தியானிக்கும் கிறிஸ்துவின் சீடர்களாகிய நாம் அதனை முழுமையாக கடைப்பிடிப்பதில் அதி கவனம் வேண்டும் இல்லையேல் விண்ணரசுக்குள் புக முடியாது என உங்களுக்குச் சொல்லுகிறேன் என எச்சரிக்கை விடுக்கிறார் இயேசு ஆண்டவர்.

பெர்சியுஸ் ஜேம்ஸ்

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

உங்கள் பங்குகளில் நடைப்பெற்ற சமீபத்திய நிகழ்வுகளைக் குறித்து செய்திகள் புகைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் படைப்புகளை tamil@herald.com.my என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். திரு அவையின் மக்களின் வாழ்வையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்த உதவியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.